**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 158/2019**

பெயர் : செல்வகுமார் P.W.1. Cross continuation

த/பெ. : கணபதி

தேதி : 16.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி: –**

**1.** தாவா சொத்தில் பயிர் செய்து வருவதற்கான பயிர் காப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான சிட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான ஆவணம் எதுவும் என்னிடம் இல்லாததால் தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றாலும், அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆவண எண்.2021/2009 என்ற ஆவணம் செம்பனார்கோவில் சார் பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் ஏற்பட்ட பிரச்சனை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கின் முகாந்திரமே எனக்கு தெரியாததால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

2. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள பல்வேறு சங்கதிகளையும் நான் நிரூபிக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு நிரூபிக்காமல் எவ்வித பரிகாரமும் பெற இயலாது என்றால் சரியல்ல. பத்திரத்தில் ஏற்பட்ட சர்ச்சை குறித்து 2ம் பிரதிவாதி எவ்வித பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளின் பெயரில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்க தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு அடிப்படை ஆதாரமற்றது என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.